**செய்தி வெளியீடு எண்: 798** **நாள்: 31.10.2018**

**செய்தி வெளியீடு**

**குடும்ப அட்டைதாரர்களின் கவனத்திற்கு**

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையினை **(06.11.2018)** முன்னிட்டு தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் அனைத்து நியாயவிலை கடைகளும் நவம்பர் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமையான **02.11.2018** அன்று வழக்கம் போல் செயல்படும். குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் குடும்ப அட்டைகளுக்குரிய அத்தியாவசியப் பொருட்களை சிரமமின்றி பெற்றுக் கொள்ளும் வகையில் **02.11.2018, 03.11.2018, 04.11.2018** மற்றும் **05.11.2018** ஆகிய **4** நாட்கள் தொடர்ந்து அனைத்து நியாயவிலை கடைகளும் வழக்கம் போல் செயல்பட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நியாயவிலை கடைகளுக்கு விடுமுறை நாளான முதல் வெள்ளிக்கிழமை அதாவது **02.11.2018** அன்று பணி நாளாக செயல்பட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதால், மூன்றாவது வெள்ளிக் கிழமை அதாவது **16.11.2018** அன்று தமிழகத்தில் உள்ள அனைத்து நியாயவிலை கடைகளுக்கும் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**